**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 6 February 2023

# சமூக சேவையில் ஈடுபடும் இளையர்கள்

**யுகேஷ் கண்ணன்**



இளையர்கள் ஸ்ரீ நாராயண மிஷன் இல்லவாசிகளுடன் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்தனர். **படம்: ஸ்ரீ நாராயண மிஷன்**

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத் தமிழ் பேரவையைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் சிங்கப்பூர் தமிழர் இயக்கத்தின் ஆதரவோடு இவ்வாண்டின் பொங்கல் திருநாளை முதியவர்களுடன் கொண்டாடினர். ஸ்ரீ நாராயண மிஷன் (சிங்கப்பூர்) பராமரிப்பு நிலையத்தைச் சேர்ந்த இம்முதியோர்களுடன் ஜனவரி ஐந்தாம் தேதி தங்கள் பொங்கலைக் கொண்டாடியதில் மகிழ்ச்சி அடைந்ததாகக் கூறினார் இப்பேரவையின் சமூக சேவை பிரிவு இயக்குநரான கணேசானந்தன் யாழினி.

மாணவர்கள் இவ்வாண்டு தமிழ் சமூகத்தை மட்டும் ஒன்றிணைக்காமல், பிற இனத்தவரையும் ஒன்றிணைத்து பொங்கல் பண்டிகையைக் கொண்டாடினர்.

முதியவர்களுக்குப் பொங்கல் பண்டிகையைப் பற்றி கற்பிக்கும் வண்ணம் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் பொங்கல் பானைகளுக்கு வண்ணம் தீட்டுதல், கோலம் போடுதல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தனிமையில் வாடும் சில முதியவர்களை மகிழ்விக்கவும் பிற இனத்தவருக்கு நம் பாரம்பரியத்தைக் கற்பிக்கவும் இந்நிகழ்ச்சி நல்லதொரு தளமாக அமைந்ததென அவர் கருதினார்.

‘ஈதல்’ என்ற பெயர்கொண்ட இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக வழிநடத்தியதற்கு இப்பேரவையின் சமூக சேவை பிரிவினரைப் பாராட்டினார் பேரவையின் துணைத் தலைவி, பாலமுருகன் தீபிகா. சேலை அணிந்து பவனி வந்த முதியோர்களைப் பார்த்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததென இவர் கூறுகிறார்.

இந்நிகழ்ச்சியின் இரண்டாம் அங்கமாக இம்முதியோருக்கு ‘டிக்டாக்’, ‘ஹெல்த்ஹப்’ போன்ற செயலிகளைப் பயன்படுத்தும் பயிலரங்கு ஒன்று, இம்மாதம் 23ஆம் தேதியன்று நடத்தப்படவுள்ளது.

சிங்கப்பூர் தமிழ் சமூகத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் மற்றொரு பிரிவினரான வெளிநாட்டு ஊழியர்களையும் ஏற்பாட்டுக் குழு மறக்கவில்லை.

‘இட்ஸ் ரெய்னிங் ரெயின்கோட்ஸ்’ அமைப்புடன் இணைந்து கடந்த மாதம் 14ஆம் தேதியன்று வெளிநாட்டு ஊழியர்களுக்கு உணவுப்பொருள்கள், ‘பபல் டீ’ ஆகியவற்றை வழங்கி, அவர்களுடன் கலந்துறவாடியதாக யாழினி பகிர்ந்துகொண்டார். அவர்களிடம் பேசியதில் கொவிட்-19 கிருமிப்பரவல் தாக்கத்தால் எதிர்கொண்ட சவால்கள், பாதிப்புகள் ஆகியவற்றைக் குறித்து மேலும் தெரிந்துகொள்ள முடிந்ததாகவும் அவர் கூறினார்.

மாணவச் சமூகத்திற்கு உதவும் வண்ணம் கடந்த மூன்றாம் தேதியன்று ‘மென்டல் ஆக்ட்’ அமைப்புடன் இணைந்து மனநலம் குறித்த பயிலரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர்கள் பள்ளியில் எதிர்கொள்ளும் மனவுளைச்சல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இப்பயிலரங்கு உதவும் என யாழினி நம்பிக்கை தெரிவித்தார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தமிழ் பேரவை தொடர்ந்து இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுமென்றும் தீபிகா தெரிவித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.